www.Padasalai.Net www.TrbTnpsc.com



# SHRI KRISHNA ACADEMY

**NEET,JEE AND BOARD EXAM COACHING CENTRE**

**SBM SCHOOL CAMPUS,TRICHY MAIN ROAD,NAMAKKAL**

**CELL:9965531727-9443231727**

**வகுப்பு : X** **முழுத் தேர்வு - 1** **மதிப்பெண்கள் : 100**

**பாடம் : தமிழ்** **காலம் : 2.30**

## பகுதி – I

**(மதிப்பெண்கள் : 15)**

**பலவுள் தெரிக** **15x1=15**

1. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
2. தமிழ்ச்சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர்
   அ) தேவநேயப்பாவாணர் ஆ) தமிழழகனார் இ) ஜெயகாந்தன் ஈ) பாரதியார்
3. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே--------------
   அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய
   இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்
4. 2016 இல் நோயாளி ஒருவரின் புற்று நோயைக் கண்டுபிடித்த ஐ.பி.எம்.நிறுவனத்தின் கணினியின் பெயர்.
   அ) வாட்சன் ஆ) வேர்டுஸ்மித் இ) ஸ்டீவ்ஸ்மித் ஈ) பெப்பர்
5. குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே –
   அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி
   இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி
6. வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறுவது
   அ) உறுவது கூறல் விடை ஆ) உற்றது உறைத்தல் விடை
   இ) இனமொழி விடை ஈ) வினா எதிர் வினாதல் விடை
7. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ----------
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
8. 'வாகை' என்பது எதனைக் குறிக்கும்?
   அ) போர் ஆ) வெற்றி இ) ஆநிரைமீட்டல் ஈ) மதில் வளைத்தல்
9. பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும் பா வகை
   அ) கலிவெண்பா ஆ) வஞ்சிப்பா இ) நேரிசை ஆசிரியப்பா ஈ) இன்னிசை வெண்பா
10. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி
    அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்
11. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
    அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆ)பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
    இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13,14, 15) விடைதருக.

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளைஅகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று

12. இப்பாடலின் ஆசிரியர் -----------
அ) கா.ப. செய்குதம்பி பாவலர் ஆ) நப்பூதனார் இ) நல்வேட்டனார் ஈ) தமிழழகனார்
13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்
அ) காசிக்காண்டம் ஆ) முல்லைப்பாட்டு இ) நீதிவெண்பா ஈ) பெருமாள்திருமொழி
14. 'மருளை அகற்றி' என்பதன் பொருள் யாது?
அ) இருளை நீக்கி ஆ) அறியாமை நீக்கி இ) துன்பம் நீக்கி ஈ) மயக்கம் அகற்றி
15. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.
அ) அருளை, மருளை, ஆ) அருளை, பெருக்கி
இ) அருந்துவதும், அருந்துணையாய் ஈ) பொருந்துவதும், போற்று

## பகுதி – II
### (மதிப்பெண்கள் : 18)
### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க: 4x2=8**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க:**
அ) செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் ஆகும்.
ஆ) வானத்துத் தேவர்கள் ஆடும் ஆட்டம் தேவராட்டம் எனப்படும்.
17. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" – உவமை உணர்த்தும் கருத்து யாது?
18. கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.
19. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.
20. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
21. 'விடல்' - என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க 5x2=10**

22. தொகைச்சொற்களை வகைப்படுத்துக.
அன்புச் செல்வன் திறன்பேசியின் தொடுதிரையில் படித்துக்கொண்டிருந்தார்.
23. கீழ்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.
(குவியல், குலை, மந்தை, கட்டு)

| சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|
| கல் | | புல் | |
| பழம் | | ஆடு | |

24. சொல்லில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க: **முத்துப்பல்**
25. **கலைச்சொற்கள் தருக.**
Symbolism
Artifacts

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

26. **பின்வரும் தொடரைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க :**
கொஞ்சம் அதிகம்

27. **பொருத்தமான நிறுத்தக் குறியிடுக :**
சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

28. நின்று – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி – III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க** **2x3=6**

29. மின்னணுப் புரட்சிக்கான காரணங்களைக் கூறுக.

30. மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனிதகுலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு எதிர்காலத் தொழில்நுட்பம் என்ற தலைப்பில் எழுதுக.

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**
கா-என்பதற்குப் பாரந் தாங்கும் கோல் என்று பொருள். இருமுனைகளிலும் சமஎடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம். மரத்தண்டின் இருமுனைகளிலும் சிறப்பு வேலைப்பாடுள்ள பலகையைப் பொருத்தி, மூங்கில் குச்சிகளால் அரைவட்டமாக இணைக்கின்றனர். அந்த அரைவட்டப்பகுதியைப் பட்டுத்துணியால் மூடி அழகுபடுத்துகின்றனர். மேலும் மயிலிறகுக் கற்றைகளை இருபுறமும் பொருத்தி, மணிகளால் அழகுபடுத்திக் காவடியை உருவாக்குகின்றனர். காவடியின் அமைப்புக்கேற்ப மச்சக் காவடி, சர்ப்பக் காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக்காவடி என்று அவற்றை அழைக்கின்றனர். இலங்கை, மலேசியா உட்படப் புலம்பெயர் தமிழர் வாழும் பிறநாடுகளிலும் காவடியாட்டம் ஆடப்படுகிறது.

அ) கா என்பதன் பொருள் யாது?
ஆ) காவடியாட்டம் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
இ) எந்தெந்த நாடுகளில் காவடியாட்டம் ஆடப்படுகிறது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க** **2x3=6**
**(34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

32. **'காற்றே வா' என்னும் கவிதையில் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.**

33. **"மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்**
**உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

34. **அடிபிறழாமல் எழுதுக.**
"அன்னை மொழியே" எனத் தொடங்கும் அன்னை மொழியே பாடலை எழுதுக.

**(அல்லது)**

"புண்ணியப் புலவீர்" எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணப் பாடலை எழுதுக.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க** **2x3=6**

35. உரிச்சொல் தொடர் என்றால் என்ன? எ.கா. தந்து விளக்குக.

36. **எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு** . - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5x5=25**

38. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

**(அல்லது)**


ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. அ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ)பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. எழுத்தர் பணிவாய்ப்பு வேண்டி தன்விவரப்பட்டியல் ஒன்றை நிரப்புக.

42. அ) அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை. அதுபோலவே கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம்பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள் என்று அறிவீர்கள் தானே? இவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள் ஐந்தினை எழுதுக.

| | |
|---|---|
| கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன். | அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்க மாட்டேன். |
| பாடப்புத்தகத்தில் பழம்பெருமை வாய்ந்த செய்திகளை இடம்பெற செய்வேன். | |

**(அல்லது)**

**மொழி பெயர்க்க :**

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Sri Lanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

**பகுதி – V (மதிப்பெண்கள் : 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க** **3x8=24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

**(அல்லது)**

ஆ) தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

44. அ) குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் ஒரு நாடகம் எழுதுக.
மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்குக் காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி.

**(அல்லது)**

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

45. அ) நாட்டு விழாக்கள் - விடுதலை போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை/ கட்டுரை/ சிறுகதை/ கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.
**குறிப்பு** : நூலின் தலைப்பு – நூலின் மையப் பொருள் - மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் - நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர்.


# SHRI KRISHNA ACADEMY

- **FULL TEST QUESTION PAPERS:**
  X-STD,XI-STD, XII-STD 10 SETS OF FULL TEST QUESTION PAPERS AVAILABLE in ALL SUBJECTS.
- **CREATIVE QUESTIONS :**
  ONE MARKS, TWO MARKS & FIVE MARKS AVAILABLE in ALL SUBJECTS.
- **MATERIALS(GUIDE) FOR**
  X-STD, XI-STD, & XII- STD AVAILABLE in ALL SUBJECTS.
- **ONE MARK TEST QUESTION PAPER**
  X-STD,XII-STD, XII-STD AVAILABLE in ALL SUBJECTS.

→ For MORE DETAILS - 99655 31727 , 94432 31727